2495

**தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்**

பிறப்பிப்பவர்: திருமதி. இரா. லலிதா, இ.ஆ.ப.,
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

---

**செயல்முறை ஆணை எண். 22616/டி3/2022, நாள்:28.04.2023**

பொருள்: நிர்வாகம் – தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் – தொழில்நுட்பக் கல்வி கோட்டம், தஞ்சாவூர் – (லேட்) திரு.மு.ஆறுமுகம், அலுவலக உதவியாளரின் வாரிசுதாரர் (மகன்) திரு.ஆ.பாலமுருகன், என்பவருக்கு கருணை அடிப்படையில் தஞ்சாவூர், செங்கிப்பட்டி, அரசினர் பொறியியற் கல்லூரியில், இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கியது – பணிவரன்முறைப்படுத்தி அரசாணை வழங்கப்பட்டது – இயக்குநர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (3ப) எண்.6, உயர்கல்வித் (சி2) துறை, நாள் 06.04.2023.

---

பார்வையில் காணும் அரசாணையில், செங்கிப்பட்டி, தஞ்சாவூர், அரசினர் பொறியியற் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் வழங்கப்பட்டு, 13.06.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திரு.ஆ.பாலமுருகன், என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 13.06.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை இணைக்கப்படுகிறது)

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப்பிரிவு 28 (1)–ன்கீழ், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 13.06.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

தனியர், பணியில் சேர்ந்த நாள் முதல், மூன்றாண்டு பணிகாலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். மேலும், தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.

இணைப்பு: பார்வையில் காணும் அரசாணை (அசல்)

ஒம்/– இரா. லலிதா
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

பெறுநர்
திரு.ஆ.பாலமுருகன்,
இளநிலை உதவியாளர்,
அரசினர் பொறியியற் கல்லூரி,
செங்கிப்பட்டி, தஞ்சாவூர் (முதல்வர் வழியாக)

நகல்:
முதல்வர்,
அரசினர் பொறியியற் கல்லூரி,
செங்கிப்பட்டி, தஞ்சாவூர்
டி3/ தொகுப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜெ சுந்தர் 2/5/2023
உதவி இயக்குநர் (நிருவாகம்)

## சுருக்கம்

உயர்கல்வி – தொழில்நுட்பக் கல்வி – தஞ்சாவூர், தொழில்நுட்பக் கல்வி கோட்டத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து மரணமடைந்த திரு.மு.ஆறுமுகம் என்பவரின் வாரிசுதாரர் (மகன்) திரு.ஆ.பாலமுருகன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## உயர்கல்வி (சி2) த் துறை

அரசாணை (3 ப) எண்.6

நாள்:. 06 04.2023.
சுபகிருது வருடம், பங்குனி - 23
திருவள்ளுவர் ஆண்டு 2054
படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதம் எண். 22616/டி3/2022, நாள். 02.08.2022.

----

ஆணை:-

மேலே இரண்டில் படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதத்தில், தஞ்சாவூர், தொழில்நுட்பக் கல்வி கோட்டத்தில் அலுவலக உதவியாளராக பணியாற்றிய திரு.மு.ஆறுமுகம் என்பவர் பணியிலிருக்கும் போது 24.02.2018 அன்று பணியிடை மரணமடைந்து விட்டதால், அவரது மகன் திரு.ஆ.பாலமுருகன் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு கோரி 02.07.2019 அன்று விண்ணப்பித்தார் என்றும், அதனைத் தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் குறித்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட

...2...

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையால் வெளியிடப்பட்ட அரசாணையின்படிஅவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது என்றும் அவர் எஸ். எஸ். எல். சி. படிப்பை ஏப்ரல்-2004-ல் தேர்ச்சி பெற்றுள்ளார். என்றும் அன்னாரின் பிறந்த தேதி 18.09.1988 என்றும் திரு.ஆ.பாலமுருகன் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கான கல்வித் தகுதி, வயது மற்றும் 3 ஆண்டுகளில் விண்ணப்பம் அளித்தல் ஆகிய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் செயல்முறை ஆணை எண்.44808/டி3/2021, நாள். 04.06.2022-ன்படி பணி நியமன ஆணை வழங்கப்பட்டது என்றும், திரு.ஆ.பாலமுருகன், தஞ்சாவூர், செங்கிப்பட்டி, அரசினர் பொறியியற் கல்லூரியில் 13.06.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் எனவும் தெரிவித்து இளநிலை உதவியாளர் பதவி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வரம்பிற்குட்பட்டதால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட திரு.ஆ.பாலமுருகன் என்பவரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 13.06.2022 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி தக்க அரசாணை வழங்கும்படி தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேற்கண்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவானது அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின்னர் தொழில்நுட்பக் கல்வித் துறையில் , தஞ்சாவூர், தொழில்நுட்பக் கல்வி கோட்டத்தில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றி 24.02.2018 அன்று பணியிடை மரணமடைந்த திரு.மு.ஆறுமுகம் என்பாரின் வாரிசுதாரரான திரு.ஆ.பாலமுருகன் என்பவரின் மனுவினை ஏற்று, தஞ்சாவூர், செங்கிப்பட்டி, அரசினர் பொறியியற் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.ஆ.பாலமுருகன், என்பவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 13.06.2022 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணி வரன்முறை செய்ய அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற விதிகளின்படி தகுதி உடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.17621/ட்டி1/2022-1, நாள்.18.11.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அ.சா.எண்.4309020/ஜி1/2023, நாள்.20.03.2023-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25.
முதல்வர், அரசினர் பொறியியற் கல்லூரி, செங்கிப்பட்டி, தஞ்சாவூர்,
(தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், வழியாக)
திரு.ஆ.பாலமுருகன், இளநிலை உதவியாளர்
அரசினர் பொறியியற் கல்லூரி, செங்கிப்பட்டி, தஞ்சாவூர்
(தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், வழியாக)

நகல்

தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
உயர்கல்வித்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

6.4.23
பிரிவு அலுவலர்.

6/4/2023